இந்து சமயமே எம்முயிர் என்று
தங்காதோடி சரிதம் அமைப்போம்

இந்து சமய எழுச்சி, இந்து சமூக உயர்ச்சி

# இந்து தர்மோதயம்

## யாப்பு விதிகள்

1989

ஓம்சக்தி

# இந்து தர்மோதயம்

~O●O~

## இந்து தர்மோதயம் யாப்பு விதிகள்

அறிமுகம்:-

இந்து மக்களின் எதிர்கால நலத்தைக் கருத்திற் கொண்டும், இந்து மதத்தில் புதிய மறுமலர்ச்சியை தோற்றுவிப்பதற்கும், சாதி, குடி, குல, பேதமை நீங்கி இந்து என்கின்ற சகோதர உணர்வில் ஒன்று படவும், அமைக்கப் பட்டதே இந்து தர்மோதயமாகும். இதன் சேவைகள் கூடியளவு இந்து மக்கள் பால் ஒன்றித்ததாக அமையும். இந்து தர்மோதயம் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு, ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கிராமிய ரீதியில் அமைக்கப்பெற்ற இந்து தர்மோதய சபைக்கு தலைமை நிருவாக சபை அமைக்கப்படும். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்படும் சபைகளினூடாக தலைமை நிருவாகசபை தொகுதி வாரியாகவும்,அதனூடாக மாவட்டவாரியாகவும் அமைக்கப்படும். இந்து தர்மோதயத்தின் யாப்பு விதிகள் பின்வருமாறு:-

பெயர்:- ''இந்து தர்மோதயம்'' என்று அழைக்கப்படும்.

நிருவாக சபைகள்:- இந்து தர்மோதயசபை என அழைக்கப் படும்.

சின்னம்:-

தாரகமந்திரம்:-

இந்து சமயமே எம்முயிர் என்று, தங்காதோடி சரித் திரம் படைப்போம்.

என்றும் என் இந்து மதத்தின்பால் சத்திய நம்பிக்கை யுடையவனுயிருப்பேன்.

கொடி:-

காரியாலயம்:-

உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், தொகுதி, மாவட்டம் ஆகிய பகுதிகளில் அமையும்.

## இந்து தர்மோதயத்தின் பொது நோக்கங்கள்

இந்து தர்மோதயத்தின் யாப்பு விதிகளுக்கு அமைய இந்து சமய மறுமலர்ச்சி, இந்து மக்களின் ஒற்றுமை எழுச்சி, இந்து பாடசாலை, ஆலய வளர்ச்சிகள், இந்து சிறுர்களின் எதிர்கால நலத்தை கருத்திற் கொண்டு அவர்களின் அறிவியல், ஆத்மீக விழிப்பு, ஆகியவற்றிற்குப் பூரணமாக உதவுதல், இந்து மக்களிடையே சமய அறிவை வளர்த்தல், ஆகியவை இந்த இந்து தர்மோதயத்தின் பொது நோக்காகும்.

## இந்து தர்மோதய சபை உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிறப்பு விதிகள்:-

தெய்வ நம்பிக்கை, உண்மை, அறநெறி வாழ்க்கை, அகிம்சைக் கொள்கை, ஆகியவை கடைப்பிடிக்கப்படுதல் சிறப்புடையதாகும்.

எச்சந்தர்ப்பத்திலும் அரசியல் கலப்பில் இந்து தர்மோதயசபை உறுப்பினர்கள் என்ற வகையில் பங்கெடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வீண் பிரச்சனைகளில் தலையிடுதல், இடரென்று ஆத்திரப்படுதல், இந்துக்களின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தல், லஞ்சம் ஊழல், சாதி, குல, குடி, இவைகளுக்கு சார்பாக நிற்றல், ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களை இழி நிலையில் நோக்குதல், ஆகியன கட்டாயமாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இந்து மதத்தின்பால் வகுக்கப்பட்ட அறநெறிகளாகிய அன்பு, கருணை, சத்தியம், ஒழுக்கம், தியாகம், பொறுமை, இன் சொல், ஆகியவை தர்மோதய உறுப்பினர்களும், அங்கத்தவர்களும் கட்டாயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

எப்போதும் இந்து தர்மோதயத்தின் பூரண வளர்ச்சிக்கும், அதன் உயரிய பணிகளுக்கும், ஆலோசனை கூறுபவர்களாகவும், ஒத்துழைப்பும், நல்லுளம் நிறைந்தவர்களாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கதே.

பதவிமோகம், கௌரவம், உயர்வு, தாழ்வு பார்த்தல், நடுநிலைமையில்லாது இருத்தல் ஆகியன உறுப்பினர்கள் தவிர்த்தல் வேண்டும்.

## இந்து தர்மோதய நிருவாக சபை அமைப்பு விதி:-

### தலைமை அமைப்பு:-

ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படும் இந்து தர்மோதய சபைக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தலைமையகம் இருக்கும். அத் தலைமையகத்திற்கு பொறுப்பாக தொகுதி வாரியத்தில் தலைமைச்சபை இருக்கும். இச் சபைகளுக்கெல்லாம் பொறுப்பாகவும், நிதி முக்கிய ஆலோசனை சபைகளூடாக பணியாளர்கள் நியமித்தல் ஆகியவற்றிற்கு நிலைக்களனாக மாவட்டத்தில் அமைக்கப்படும் இந்து தர்மோதய தலைமைச்சபை இருக்கும்.

### அங்கத்துவ உரிமை:-

இந்து தர்மோதயத்தில் மாவட்ட கிராமிய ரீதியில் சகல இந்துக்களும் அங்கத்துவம் பெறுவர். இதில் 17வயதுக்கு மேற்பட்ட சகல இந்துக்களும் முழுமையான அங்கத்துவ உரிமை பெற்றவராவர்.

### அங்கத்துவ உரிமைப் பத்திரம்:-

இந்து தர்மோதய சபையில் அங்கத்துவம் பெறுபவர் ரூபா 10/- ஐச் செலுத்தி அங்கத்துவப்பத்திரத்தில் பூரணப்படுத்தப்பட்ட பின் முழுமையான அங்கத்தவரென ஏற்றுக்கொள்ளப்படுவர்.

**நிருவாக அமைப்பு:-**

**தலைவர்:-**

ஒவ்வொரு கிராமத்திலும் இந்து தர்மோதய சபைக்கு 5 பேர் தலைவர்களாக தெரிவு செய்யப்படுவர். 5 பேர்கள் மூலமாகவும் 5பேரில் ஒருவர் இச்சபைக்கு விசேட தலைவ ராக தெரிவு செய்யப்படுவர். ஏனைய நான்கு பேரும் இணைத் தலைவர்களாக கடமையாற்றுவர் தலைவரில்லாத பட்சத்தில் நான்கு பேரில் ஒருவர் தலைவராக கடமையாற்றுவர். சகல நிறைவேற்று அதிகாரங்களும் விசேடமாக தெரிவு செய்யப் பட்ட தலைவர் மூலமே நிறைவேற்றப்படும்.

**தலைவர் மூலம் நிறைவேற்றும் அதிகாரங்கள்**

பொதுக்கூட்டம், நிருவாகசபைக்கூட்டம் ஆகியவற் றிற்கு அதிகாரம் வழங்குதல், கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், அங்கத்துவ உரிமை வழங்கல், சந்தாப்பணம் விடயமான ஆலோசனை வழங்குதல், ஆகியன தலைவர் பாலுள்ள நிறைவேற்றதிகாரங்களாகும்.

**செயலாளர்:-**

இணைச் செயலாளராக இருவர் தெரிவு செய்யப் படுவர். இவர்கள்பால் உள்ள கடமைகள் நிருவாக சபை கூட்டம், பொதுக்கூட்டங்களுக்கு அறிவித்தல் இடு தல், வெளியிலிருந்து வருகின்ற சபை சம்மந்தமான கடி தங்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்புதல், எழுத்துச் சம்மந்தமான ஆவணங்கள், கணக்கறிக்கைகள் சம்மந்த மான பிரதிகள், செயற்குழு அமைத்தல், சபையின் முக் கியமான காரியங்களில் அதிகளவு பங்கேற்று செயற்பாடு செய்தல்.

**பொருளாளர்:-**

இந்து தர்மோதய சபையின் நிதி சம்மந்தமான சகல பொறுப்புக்களும் இவரே காப்பாளராவார். சபையின்

தீர்மானப்படி செலவுகள் செய்தல், வரவு, செலவு சம்மந்தமான அறிக்கைகள் உடனுக்குடன் பதிவு செய்து வைத்திருத்தல், நன்கொடைப் பொருள்கள், உறுதிகள் ஆகியன வைத்திருத்தல், சந்தாப்பணங்கள், அங்கத்துவப்பணங்கள், நன்கொடைப் பணங்கள், ஆகியவற்றை பாதுகாப்பாக வைப்பிலிடுதல், அளவறிந்து செலவு செய்தல் ஆகியன பொருளாளரால் கடைப்பிடிக்க வேண்டும்.

**நிருவாக உறுப்பினர்கள்:-**

இந்து தர்மோதய சபையின் பொதுவான உறுப்பினர்களாக 17 பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் முன் கூறிய விதிகளுக்கு ஏற்ப நடத்தல் முக்கியமான வேலைகளில் பங்கெடுத்தல், நிதி வசூல் சம்மந்தமான வேலைகளில் உதவி செய்தல், ஆகியன இவர்களால் கடைப்பிடிக்கப்படும்.

இந்து தர்மோதய மொத்தச்சபை உறுப்பினர்கள் 25 பேர் கொண்ட உறுப்பினர்களாவர்.

**தலைமைச்சபை அமைத்தல்:**

கிராம ரீதியாகத் தெரிவு செய்யப்படும் இந்து தர்மோதய சபை உறுப்பினர்களினூடாக உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்து தர்மோதய சபை அமைக்கப்படும். உதவி அரசாங்க அதிபர் பிரிவினூடாக அமைக்கப்படும் இந்து தர்மோதய சபை ரீதியினூடாக தொகுதிவாரி இந்து தர்மோதய சபை அமைக்கப்படும். தொகுதி வாரியாக அமைக்கப்படும் இந்து தர்மோதய சபையினூடாக மாவட்ட இந்து தர்மோதயசபை அமைக்கப்படும்.

**பொதுச் செயலாளர்:-**

மாவட்ட ரீதியில் அமைக்கப்படும் பொதுச் செயலாளரே சகல இந்து தர்மோதய சபைகளுக்கும், பொறுப்பாளராகவும், கண்காணிப்பாளராகவும் அமைவர். பொதுச் செயலாளர் தெரிவு மாவட்ட சபை மூலமாகத் தெரிவு செய்யப்படுவர்

**நிதி ஒழுங்குகள்:-**

கிராமிய ரீதியாக உதவி அரசாங்க அதிபர் பிரிவினூடாகத் தொகுதி ரீதியாகப் பெறப்படும் இச்சபைக்குரிய சகல பணங்களும், மாவட்ட இந்து தர்மோதய சபையினூடாக தகுந்த வங்கியில் வைப்பிலிடப்படும். கிராமிய உதவி அரசாங்க பிரிவு தொகுதி ரீதியாகவுள்ள பொருளாளர்கள் மூலம் பதிவு செய்யப்பட்டு மாவட்டப் பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே வங்கியில் வைப்பிலிடப்படும். தேவையான சகல செலவுகளுக்கும் மாவட்ட இந்து தர்மோதய சபையே பொறுப்பாக இருக்கும். கிராமியப் பொருளாளரிடம் 100/- ஐயும், அதிபர் பிரிவு பொருளாளரிடம் 500/- ஐயும், தொகுதிச் சபைப் பொருளாளரிடம் 1000/- ரூபாயும் அவசர தேவைக்குரிய பணமாக கையிருப்பில் இருக்க வேண்டும்.

**கூட்ட ஒழுங்குகள்:-**

சகல இந்து தர்மோதய சபைக்குரிய கூட்டங்கள் தலைவரின் அங்கிகாரம் பெற்று செயலாளரால் அறிவித்தலிடப்படும். நிருவாக சபைக்கூட்டத்திற்கு 3 நாட்களுக்கு முன்பும், பொதுக்கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன்பும் அறிவித்தலிடுதல் வேண்டும். இக்கூட்டங்களில் நிருவாக சபைக்கூட்டம் மாதக்கடைசி வாரமாகிய ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொதுக்கூட்டம் 6 மாதக் கடைசியில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், வருடத்திற்கு ஒரு முறையும் இடப்படல் வேண்டும்.

**கணக்காய்வாளர்;-**

ஒவ்வொரு சபைகளிலும் இரண்டு பேராக கணக்காய்வாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பொருளாளரிடமுள்ள கணக்கறிக்கையை பரிசீலனைசெய்து ஆறு மாதக் கடைசியில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் பொருளாளர் கணக்கறிக்கையை வாசித்த பின்பு கணக்காய்வாளர் பொதுச்சபையில் தமது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணம் வைப்பிலிருந்து எடுக்கும் முறை:-**

தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகிய மூவரும் கையொப்பமிட்ட பின்னரே பணம் எடுக்கலாம். பொதுச் சபையினூடாக நிருவாகத்தினால் ஆலோசிக்கப்பட்ட செல வறிக்கையை சமர்ப்பித்து பொதுச்சபை அங்கிகாரம் பெற்ற பின்பு பெருந்தொகைச் செலவுகள் செய்தல் வேண்டும். சாதாரணமான செலவுகளுக்கு நிருவாக சபை அதிகாரமே தேவைப்படும்.

**நிதிகள்**

அங்கத்துவ சந்தாப்பணநிதி, அன்பளிப்பு நிதி, வசூல் நிதி, ஆகியன இந்து தர்மோதய நிதிகளாகும்.

**இந்து தர்மோதய விசேட உத்தியோகத்தர்;-**

மாவட்ட சபையினூடாக விசேட உத்தியோகத்தர் சம்பள அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இவர் கிராமிய சபைகள் அமைத்தல், அதிபர் பிரிவு சபை அமைத்தல், தொகுதி சபை அமைத்தல் ஆகியவை இவரின் மேற்பார்வையில் நடைபெறும். இந்து தர்மோதய சபைக் கூட்டங்களில் கலந்து ஆலோசனை வழங்குதல், அவர்களுக்கு பயிற்சியளித்தல், ஆகியன இவரின் பொறுப்புக்களாகும்

**இந்து தர்மோதய சபையில் உறுப்பினர்களாகச் சேருவதற்கு தகைமையுடையோர்:-**

கல்வி, தெய்வநம்பிக்கை, ஒழுக்கம், பாஷை தேர்ச்சி பொறுமை ஆகியன அமைந்திருத்தலும் ஆண், பெண் ஆகிய இரு தரத்தாரும் இச்சபையில் உறுப்பினராக இருக்க தகைமையுடையவராவர்.

**போசகர்கள்;-**

சமய அறிவு, வயதுமுதிர்ச்சி, ஆகியன அமையப் பெற்றவர்களும், இந்துமத குருமார்களும், இச்சபையின் போசகர்களாகக் கடமையாற்றுவர்.

**புதிய சபை தெரிவு ஆண்டு:-**

மூன்ருண்டுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும்.

**உறுப்பினர்க்கு சில கட்டாய விதிகள்:-**

சபையில் ஆராயும் எந்தத் தீர்மானத்தையும், உடன் பரப்புதல், அதைப்பற்றித் தவருகப் பிறரிடம் விமர்சித்தல், சட்ட விதிக்கு முரண்பாடாய் நடத்தல் அத்து மீறி நடத்தல், ஆகியன தவிர்க்கப்படுதல் வேண்டும். ஓர் உறுப்பினர் தனது ஆலோசனையைக் கூறிய பின்னரே அடுத்த உறுப்பினர் பேசுதல் வேண்டும். சொந்தப் பகைமை பாராட்டல் அஞசார மான வார்த்தைகள் பேசுதல், ஆகியன விலக்குதல் நன்று. மூன்று நிருவாக சபைக் கூட்டத்திற்கு வருகை தரமுடியாத பட்சத்தில் வரமுடியாத காரணத்தை எழுத்து மூலம் செயலாளருக்கு ஒரு நாளைக்கு முன்பு (கூட்டத்திற்கு) அறிவித்தல் வேண்டும். மூன்று கூட்டங்களுக்குக் காரணம் காட்டாமல் கலந்து கொள்ளாத உறுபினர்கள் சபையிலிருந்து நீக்கி சாதாரண இந்து அங்கத்தவராக இருப்பர். இவையாவும் விசேடமாகக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய கொள்கைகளாகும்.

**இந்து தர்மோதயத்தின் சிறப்பு விதிகள்:-**

இந்து தர்மோதயம் முழுமையமாக இந்து மக்களின் உயரிய வாழ்க்கையில் பணி செய்யும் சபையாக இருக்கும்.

இந்து ஆலயங்கள், சில சம்பிரதாய கலாசாரங்களுக்கு மத்தியில் அமைவதால் ஆலயங்களோடு தொடர்பில்லாமல் செயற்படும் இருந்தும் ஆலய சபைகள் விரும்பினுல் ஆலய வளர்ச்சிக்கு இந்து தர்மோதயம் தனது பங்களிப்பைச் செய்யும்.

ஆலயங்கள் சீர்கெடப்படும் போது உற்சவங்கள் தடைப்படும் போது ஆலய பொருளாதாரம் சீர்குலையப்படும் போது இத்தர்மோதயம் ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும்.

சமய கலாச்சாரங்களை வளர்த்தல், சமய நூல்கள் வெளியிடுதல், சமயக்கருத்தரங்குகள் நடத்துதல், சமய வகுப்புகள் நடத்துதல், ஆகியன இத்தர்மோதயத்தின் முக்கிய நோக்கமாகும்.

எதிர் காலத்தில் இந்து சமய மக்களுக்கு இந்த தர்மோதயமே பூரண கலங்கரை விளக்கமாக அமையும்.

இந்து இளைஞர் மன்றங்கள், சைவ மகா சபைகள் பொதுத் தொண்டர் ஸ்தாபனங்கள், ஆகியவற்றின் உதவிகளையும் இந்த தர்மோதய சபை பெற்றுக்கொள்ளும்.

St. Sebastian Printers, Batticaloa.